இதில் வேடிக்கை என்ன வென்றால் இப்படி கையாடல் நடை பெறுகிறது என்று தொடர்ந்து புகார் கொடுக்கப்படுகிறது; சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானே சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர் சாகும் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, இறந்த பிறகு தான் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் விசாரணைக்கு வந்து கையாடலை கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்படி காலங்கடந்த முறையிலே நடவடிக்கை எடுத்த அதிகாரிகள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, கையாடல் செய்யப்பட்டதாக குறிப்பிட்ட 14 ஆயிரம் சொச்சம் ரூபாய் அவர் இறந்ததற்கு பிறகு அவருடைய வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்தச் சங்கத்தின் மீது எப்போது புகார் சொல்லப்பட்டது, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் புகார் கொடுத்த தேதி மற்ற விவரங்களைக் கொடுத்து தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தரலாம்.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் மூலம் வெட்டப்படும் கிணறுகள்.

(224 —*வினா 16566)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:—மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார்கள் கடன்பெற்று கிணறு பொய்த்துவிட்டால் கடன் முழுவதும் ரத்து செய்வது போல், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் வெட்டும் கிணறுகள் பொய்த்தவற்றுக்கும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தனியார்கள் கிணறு வெட்டுவதற்காக நிலவள வங்கிகள் மூலம் பெறும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுவதில்லை, பொய்த்த கிணறுகள் மான்ய விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு மட்டுமே ரத்து செய்யப்படுகிறது. இவ்விதிமுறைகளின் படி கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களுக்கு அளிக்கப்படும் கடன்களும் ரத்து செய்யப்படுகின்றன.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கிகளிலே கிணறு வெட்டுவதற்காக கடன் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற கடன் மூலம் வெட்டப்படுகிற கிணறுகள் பொய்த்து விட்டால் கடன் முழு

வதும் தள்ளுபடி செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படி செய்யப்படுகிற அந்த தள்ளுபடி கோப்புகளில் அதிகாரிகள் பரிந்துரை செய்தும் மாநில வங்கியிலே தள்ளுபடி கிட்டாத அளவிற்குத் தான் அது இருந்து கொண்டிருக்கிறது. அதுபோன்ற கோப்புகளில் எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து கிணறுகள் பொய்த்து விட்ட விவசாயிகள் பலன் அடைகிற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நிலவள வங்கி பொய்த்த கிணறுகள் மானிய நிதி ஒன்றினை வைத்திருக்கிறது. அதன் கீழே சிறு விவசாயிகளாக இருந்தால் வேலை மதிப்பிலே 90 சதவீதம் அல்லது அவர் பெற்றிருக்கிற கடனிலே 90 சதவீதம் இதில் எது குறைவோ அதையும், அதேபோல சிறு விவசாயிகள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில் வேலை மதிப்பில் 75 சதவீதமும் அல்லது வழங்கப்பட்ட கடனில் 75 சதவீதம், இதில் எது குறைவோ அதையும், அசலைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் உச்ச வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. இந்த வரம்பிற்குட்பட்டு இருக்கிற அனைத்தும் மாநில நிலவள வங்கி பொய்த்த கிணறுகள் மானிய நிதியிலேயிருந்து நிச்சயமாக வழங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொய்த்த கிணறுகளுக்கு மானிய உதவி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் கொடுப்பதற்கு நிதி எந்த அளவிற்கு இருக்கிறது? அது எந்த அளவிற்கு உபயோகிக்கப்பட்டு இருக்கிறது? அந்த நிதியில் இருந்து பொய்த்துப் போன கிணறுகளுக்கு வாங்கிய கடன் முழுவதும் தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, நீரேற்றும் பாசன கூட்டுறவுச் சங்கங்களின் விவசாயிகட்கு 30–9–1983 ஆம் தேதிவரையில் அளிக்கப்பட்ட மானிய உதவி ரூ. 6,59,903.17 ஆகும். இதுபோன்று இதர விவசாயிகட்கும் நான் ஏற்கனவே சொன்ன வரம்புக்குட்பட்டு வந்தால், அவர்களுக்கும் மாநில நிலவள வங்கி நிதியில் இருந்து கடன் வழங்கப்படுகிறது. மொத்தமாக அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை விட இப்படி வருகின்ற அந்தக் கோரிக்கைகள்மீது உடனுக்குடன், நான் ஏற்கனவே சொன்ன வரம்புக்குட்பட்டு இருக்குமானால், நிவாரணம் வழங்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS